# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, மாச்சு மாதம் 31 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா** **தபாற் செலவு : ரூபா**

## 2006 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டம்

[2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 2/2006

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச் ) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :– *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) ஓராம் உட்பிரிவில், (IV) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :–

"(IV) (அ) 2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2005, யூலை 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கபபடற்பாலதான காலப் பகுதிக்கும், 2005, யூலை 1 ஆம் தேதியிலிருந்து 2005, ஓகத்து 1 ஆம் தேதி வரையிலான காலப்பகுதிக்கும் பதினெட்டு சதவீதப்படி (ஆடம்பரவீதம்) (இதில் வரிப் பின்னம் 9/59 ஆகும்) ; அத்துடன்

(ஆ) 2005, ஓகத்து 2 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும் 2005, செத்தெம்பர் 30 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கும், அத்துடன் 2005, ஒத்தோபர் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும் இருபது சதவீதப்படி (ஆடம்பர வீதம்) (இதில் வரிப்பின்னம் 1/6 ஆகும்),

சைபர் வீதப்படி வரி இறுக்கப்படற்பாலனவான அத்தகைய பண்டங்கள் அல்லது சேவைகள் தவிர, நான்காம் அட்ட வணையிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறு வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியின்மீது; அத்துடன் ” ;

(2) இரண்டாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், “தைத்துமுடித்த ஆடைகளின்மீது வழங்கலின் மீது,” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “தைத்துமுடித்த ஆடைகளின் வழங்கலின்மீது ; அல்லது” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) இரண்டாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

“(iii) நேரடியாகவோ அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளவோர் ஏற்றுமதி வியாபார இல்லத்தினூடாகவோ ஏற்றுமதி செய்கின்றவரும், 1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட வருமான ஏற்றுமதியாளரொருவரினால் வழங்கப்பட்ட துணிவகையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட தைத்த ஆடைகளாகவுள்ள, புடவைப் பங்கீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவரினால் செய்யப்படும் தைத்த ஆடைகளின் வழங்கலின்மீது ; அல்லது

(iv) ஏதேனும் தைத்த ஆடையின் பெறுமதியையும் தரத்தையும், பண்பையும் சீராக்குகின்ற விளைவைக் கொண்ட சேவைகளாகவுள்ள

*1996 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையினால் அங்கீகரிக் கப்பட்ட எவரேனும் வழங்குநரால், எவரே னும் உற்பத்தியாளரினால் ஒன்றில் நேரடியாகவோ அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஓர் ஏற்றுமதி வியாபார இல்லத்தினூடாகவோ ஏற்றுமதி செய்வதற்கெனத் தைத்த ஆடை களை உற்பத்தி செய்யும் நோக்கத்துக்காகச் செய்யப்பட்டதாகவுள்ள ஏதேனும் சேவை களின் வழங்குதலின்மீது,*

*அத்தகைய தைத்த ஆடைகளின் உற்பத்தியாளரின் அல்லது சேவை வழங்குநரின் செயற்பாடுகள் புடவைப் பங்கீட்டுச் சபையினால் கண்காணிக்கப்பட்டு, அத்துடன் அத்தகைய செய்து முடித்த பண்டங்கள் உண்மையில் வழங்குதல்களைப் பெறுபவரினால் ஏற்றுமதிசெய்யப் பட்டிருக்கின்றனவெனக் கூறி, ஆணையாளர் தலைமையதி பதியினால் விதிக்கப்பட்டவாறு காலாண்டு அடிப்படை யொன்றின் மீது அத்தகைய பண்டங்களின் கையுதிர்ப்புப் பற்றிய கணக்கிலக்கம் ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்குப் புடவைப் பங்கீட்டுச் சபையினால் கொடுத்து தவப்படும் காலம்வரை." ;*

*(4) மூன்றாம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்பு வாசகத்தில் —*

*(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iv)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவ தனைச் சேர்ப்பதன் மூலமும் :—*

*"(v) சுங்கப் பிணையத்தின் இடப்பரப்பிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி அல்லது எந்திரத் தொகுதி உட்பட, பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் ஏற்றுமதி செய்யப்படுவதற்குப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக அத்தகைய ஆளினால் பயன்*

படுத்தப்படுவதற்கென அத்தகைய பொறித் தொகுதியை அல்லது எந்திரத்தொகுதியை இறக்குமதிசெய்கின்றவரான அல்லது பெறுகின்றவரான அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பொறித் தொகுதி அல்லது எந்திரத்தொகுதி மீது ;

(vi) சுங்கப் பிணையத்தின் இடப்பரப்பிலிருந்து பெறப்பட்ட எவையேனும் பண்டங்களுட்பட, சே.பொ.வ. பின்போடுதற்றிட்டத்தின்கீழ், 1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப் பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டவரும், 2 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவரும் பண்டங்களை உற்பத்திசெய்வதற்காக அல்லது ஏற்றுமதி செய்வதற்காகத் தைத்த ஆடைகளின் உற்பத்தியாளரொருவருக்குச் சேவைகளை வழங்குவதற்காக அத்தகைய பண்டங்களை இறக்குமதிசெய்கின்றவரும் அல்லது பெறுகின்றவருமான பதிவுசெய்யப்பட்ட வழங்குநரொருவரினால் இறக்குமதிசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள்மீது ;

(vii) சுங்கப் பிணையத்தின் இடப்பரபிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி அல்லது எந்திரத்தொகுதி உட்பட, 2 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் குறிப்பீடு செய்யப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவரும், இறக்குமதி செய்யப்படவுள்ள பண்டங்களின் உற்பத்திக்காக 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களை உற்பத்திசெய்வதற்காக அல்லது சேவைகளை வழங்குவதற்காகப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால்

பயன்படுத்தப்படுவதற்கென அத்தகைய பொறித்தொகுதியை அல்லது எந்திரத் தொகுதியை இறக்குமதிசெய்கின்றவரும் அல்லது பெறுகின்றவருமான அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பொறித்தொகுதி அல்லது எந்திரத் தொகுதிமீது ;

(viii) சுங்கப் பிணையத்தின் இடப்பரப்பிலிருந்து பெறப்பட்ட பண்டங்கள் உட்பட, 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அங்கீகரிக்கப் பட்டவரும் அத்தகைய வழங்குகைக்காக அத்தகைய பண்டங்களை இறக்குமதிசெய் கின்றவரும் அல்லது பெறுகின்றவருமான பதிவு செய்யப்பட்ட வழங்குநரொருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின்மீது ;

(ix) சுங்கப் பிணைத்தின் இடப்பரப்பிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி அல்லது எந்திரத்தொகுதி உட்பட, ஏற்றுமதி செய்யப்படவுள்ள பண்டங்களின் உற்பத்திக் காக 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களை உற்பத்திசெய்வதற்காகப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவருரினால் பயன் படுத்தப்படுவதற்கென அத்தகைய பொறித் தொகுதியை அல்லது எந்திரத்தொகுதியை இறக்குமதி செய்கின்ற அல்லது பெறுகின்ற, 2ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அங்கீ கரிக்கப்பட்ட அத்தகைய ஆளினால் இறக்கு மதிசெய்யப்பட்ட அத்தகைய பொறித்தொகுதி அல்லது எந்திரத் தொகுதிமீது, ”;

(ஆ) அவ்வுட்பிரிவின் இரண்டாவது காப்புவாசகத்தின் (இ) என்னும் பந்தியில் "இரண்டாயிரத்து மூன்று சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் கப்பல்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "2003, சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் 2005, நவெம்பர் 16 ஆந் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் கப்பல்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அதன் (ஈ) என்னும் பந்தியில் "வைக்கப்பட்டு" என்ற சொல்லுக்குப் பதிலாக "வைக்கப்பட்டு ;" என்ற சொல்லை இடுவதன் மூலமும் ;

(2) (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(உ) ஏதேனும் கேள்விப்பத்திர உடன்படிக்கையின் கீழ் அத்தகைய பண்டங்களை வழங்குகின்ற எவரேனும் ஆளினால்,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, (அ) என்னும் பந்தியில் "ஐந்து சதவீதத்தால் அதிகரிக்கப்பட்ட தொகையின் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏழு சதவீதத்தால் அதிகரிக்கப்பட்ட தொகையின், அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, "அத்தகைய சேவைக்கான கொடுப்பனவு முழுவதும் இலங்கைக்கு வெளியே இலங்கையிலுள்ள வங்கி ஒன்றின்மூலம் பெறப்பட்டிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய சேவைக்கான கொடுப்பனவு முழுவதும் இலங்கைக்கு வெளியேயிருந்து வங்கி ஒன்றின்மூலம் வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, (6) உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "அத்தகைய வழங்கல்கள் நியம வரிவீதத்தில் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டத்தின் 2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தின்கீழ் அளிக்கப்பட்ட வழங்கல்களாகக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் —

(அ) "வரி அறவிடப்படக்கூடிய" மற்றும் "வரி விதிக்கப்படக்கூடியதான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சட்டத்தின் III அ என்னும் அத்தியாயத்தின்கீழ் அறவிடப்பட்ட ஏதேனும் வரி தவிர்ந்த வரி அறவிடப்படக்கூடிய" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூல மும் ;

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான நான்காம் காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்பு வாசகத்தை மாற்றீடுசெய்வதன் மூலமும் :—

"ஆயின், மேலும், இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படற்பாலதாய எவரேனுமாளினால் நான்காம் அட்டவணையில் (ஆடம்பர வீதம்) குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன்மீது செலுத்தப்படும் ஏதேனும் உள்ளீட்டு வரி பதினைந்து சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்." ;

(2) ஐந்தாம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தின் (ஈ) என்னும் பந்தியில் "மிகையொன்று உள்ளவிடத்து" என்னும் சொற்களிலிருந்து "மீளளிப்புச்

செய்யப்படுதல் வேண்டும் :" என்னும் சொற்களும் எண்களும் வரையுள்ளவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :–

"மிகையொன்று உள்ளவிடத்து,

(உ) 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்றுமதியாளரொருவருக்குப் பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்குநரொருவராக விருந்து புடவைப் பங்கீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளின் அல்லது பண்டங்களின் ஏற்றுமதியாளர்களுக்குப் பண்டங்களின் வழங்குநரொருவருவராகவிருந்து ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப் பட்டுள்ள எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆளின் 2 ஆம் பிரிவின்கீழ் பிற்போடப்பட்ட வரியுட்பட உள்ளீட்டுவரியின் மேன்மிகை யொன்று உள்ளவிடத்து,

விடயத்துக்கேற்றாற்போல, மேன்மிகையின் அத்தகைய பாகம் அல்லது அத்தகைய மேன்மிகை, 2002, யூலை 31 ஆம் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இச்சட்டத்தின்கீழ் அல்லது 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்களும் சேவைகளும் மீதான வரிச்சட்டத்தின்கீழ் ஏதேனும் வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதியிலிருந்து முன்கொணரப்பட்ட ஏதேனும் மேன்மிகை உட்பட, 58 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் முறையில் மீளளிக்கப்படுதல் வேண்டும் :–

(அ) 2002, ஓகத்து 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதும் ஆனால் 2006, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைகின்றதுமான வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பில் மேன்மிகையானது இருப்பின், அத்தகைய மேன்மிகை, வரிவிதிக்

கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவுக்குப் பின்னர் அல்லது அத்தகைய வரி விதிக்கப்படற் பாலதான காலப்பகுதிக்கான விவரத்திரட்டு பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பிந்தாமல், இவற்றுள் எது பிந்தியதாகவுள் ளதோ அதிலிருந்து மீளளிக்கப்படுதல் வேண் டும் ;

(ஆ) மேன்மிகையானது 2006, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கு கின்ற வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலானதாயின் –

(i) மேன்மிகையானது, வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதிக்கான காலப் பகுதியில் முடிவுக்குப் பின்னர் அல்லது வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்கான விவரத்திரட்டு பெறப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக் குப் பிந்தாமல், இவற்றுள் எது பிந்திய தாகவுள் ளதோ அதிலிருந்து, பந்திகள் (இ), (ஈ) அல்லது (உ) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவுசெய்யப் பட்ட ஆளொருவருக்கு மீளளிக்கப் படுதல் வேண்டும் ; ஆயின், அத்தகைய மீளளிப்பு, மூன்று மாதகாலப்பகுதிக் குச் செல்லுபடியாகவுள்ள, பதிவுசெய் யப்பட்ட ஆளினால் வங்கி உத்தரவாத மொன்று அல்லது காப்புறுதி முறி யொன்று கொடுத்துதவப்படுவதற் கமையவிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) மேன்மிகையானது, மற்றெல்லா விடயங்களிலும், வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதியின் முடிவுக் குப்பின்னர் அல்லது இயைபான வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக் கான விவரத்திரட்டு பெறப்பட்ட தேதியி லிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிந்தாமல் மீளளிக்கப்படுதல் வேண்டும்.;” ;

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், அதன் (iv) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக, விபரத்திரட்டுக் கொடுத்துதவப்பட்டிராதவிடத்து, உள்ளீட்டு வரியானது வெளியீட்டு வரியிலிருந்து கழிக்கப்பட்டிராததாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :—

"ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இவ்வுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட "பொருளாதாரத் தேய்வு" என்பது, 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட எவரேனுமாளின் குத்தகைக் கையிருப்புகளின் பாகமாக வமைகின்றவொரு சொத்தாகவுள்ள, அத்தகைய ஆளின் எவையேனும் சொத்துக்கள் தொடர்பாக ஏற்புடையததாதலாகாதென இத்தால் வெளிப்படுத்தப் படுகின்றது.";

(2) எட்டாம் உட்பிரிவில் "2004, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மாதத்துக்கும் செலுத்தப்படற்பாலதான வரித்தொகை (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சேர்பெறுமதியின் பதினைந்து வீதமாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2004, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதும் ஆனால் 2005, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்றதுமான ஒவ்வொரு மாதத்துக்கும் செலுத்தப்படற்பாலதான வரித்தொகை (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சேர்பெறுமதியின் பதினைந்து வீதமாதலும், 2006,

சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடருகின்ற ஒவ்வொரு மாதத்துக்கும் இருபது வீதமாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இப்பிரிவில் "செலுத்தப்பட்டவரி" என்பதற்கான ஏதேனும் குறிப்பீடு, உள்ளீட்டு வரிக்கான வரவைக் கழிப்பனவு செய்த பின்னர் கணிக்கப்பட்டு ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்பட்ட வரி என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவு, (ஊ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"(ஊ) ஏதேனும் ஒப்புரவுப் பிணைப்பொறுப்பின், கடன் பிணைப்பொறுப்பின் அல்லது பங்குபற்றும் பிணைப் பொறுப்பின் வழங்குகை, பொறுப்பேற்பு, கீழ்ப்பொறுப் பேற்பு அல்லது கீழொப்பமிடுகை ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"(1) ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலான வரியானது, வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவை அடுத்துப்பின்வரும் மாதத்தின் இருபதாம் நாளுக்குப் பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், எந்த ஆளின் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதி 83 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட "வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினது (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப் பட்ட வரைவிலக்கணத்தினுள் அடங்குகின்றதோ அந்த ஆளின் விடயத்தில், 2006, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டு தொடர்பிலான

வரியானது, பின்வரும் முறையில், விபரத்திரட்டு சமர்ப்பிக் கப்பட்டதுடன், இறுதிச் சரிக்கட்டுதல்கள் எவையேனும் இருப்பின் அவற்றைச் செய்வதற்கமைய, செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முதலாவது மாதத்துக்காகச் செலுத்தப்படற்பால தான வரியானது, வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் இரண்டாவது மாதத்தின் இருப தாம் நாளுக்குப் பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண் டும் ;

(ஆ) வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் இரண் டாவது மாதத்துக்காகச் செலுத்தப்படற்பாலதான வரியானது, வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகு தியின் மூன்றாவது மாதத்தின் இருபதாம் நாளுக்குப் பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(இ) வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகச் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின் கீழான தொகையை கழிப் பனவுசெய்த பின்னர் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகச் செலுத்தப்படற்பாலதான வரியானது, அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவை அடுத்துப் பின்வரும் மாதத்தின் இருபதாம் நாளுக்குப் பிந்தாமல் செலுத் தப்படுதல் வேண்டும்.

மேலே தரப்பட்டுள்ளவாறு செலுத்தப்படாத ஏதேனும் வரியானது, தவணை தவறியதாகக் கருப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய வரி எந்த ஆளினாற் செலுத்தப் படற்பாலதோ அந்த ஆள், அல்லது ஏதேனும் வரி ஒருவ ருக்கு மேற்பட்ட ஆட்களினால் செலுத்தப்படற்பாலதாக விருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வோராளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் தவணை தவறிய ஒருவராகக் கருதப் படுதலும் வேண்டும்.”.

*12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தாற் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :–*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*(1) ஆறாம் உட்பிரிவில் "வரிமதிப்பீட்டாளர் ஒருவரால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேன்முறையீடானது எந்த வரிமதிப்பீட்டுக்கெதிராகச் செய்யப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டைச் செய்த வரிமதிப்பீட்டாளர் தவிர்ந்த வரிமதிப்பீட்டாளர் ஒருவரால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".*

*(2) எட்டாம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தில் "இப்பிரிவின்கீழ்" என்னும் சொல்லிலிருந்து "கருதப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுக :–*

*"ஒவ்வொரு மேன்முறையீடும் கிடைக்கப்பெற்றமை (அது கிடைக்கப்பெற்றமையிலிருந்து முப்பது நாட்களினுள் அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அறிவிக்கப்பட்டதன்மேல், அறிவித்தற் கடிதத்தின் தேதியானது, இப்பிரிவின் நோக்கங்களுக்காக அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்ற தேதியாகக் கருதப்படுதலும் வேண்டும்.). எவ்வாறாயினும், ஏதேனும் மேன்முறையீடு கிடைக்கப்பெற்றமை அவ்வாறு அறிவிக்கப்படாதவிடத்து, அத்தகைய மேன்முறையீடு, அது ஆணையாளர் தலைமையதிபதியிடம் ஒப்படைக்கப்பட்ட நாளன்று ஆணையாளர் தலைமையதிபதியினால் கிடைக்கப் பெற்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

***13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் "22 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியில்" என்னும் சொற்களிலிருந்து எண்களிலிருந்தும் "மீளளிக்கப்படுதல்*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

வேண்டும்." என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"22 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆளினால் மேன்மிகையாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் அத்தகைய தொகை எக்காலப் பகுதியில் எழுந்ததோ, வரிவிதிக்கப்படற்பாலதான அக்காலப் பகுதியில் முடிவிலிருந்து அல்லது வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விவரத் திரட்டு பெறப்பட்ட திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்ளாக, இவற்றுள் எது பிந்தியதோ அக்காலப் பகுதிக்குள்ளாக, அத்தகைய ஆளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், மேலும், 22 ஆம் பிரிவின் 5 ஆம் உட்பிரிவின் (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட பதிவுசெய்யப்பட் ஆளொருவரினால் மேன்மிகையாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் அத்தகைய தொகை எக்காலப்பகுதியில் எழுந்ததோ, வரிவிதிக்கப்படற்பாலதான அக்காலப்பகுதியின் முடிவிலிருந்து அல்லது வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விவரத் திரட்டு பெறப்பட்ட தேதியிலிருந்து, இவற்றுள் எது பிந்தியதோ அதிலிருந்து மூன்று மாதக் காலப்பகுதிக்குச் செல்லுபடியாகவுள்ள வங்கி உத்தரவாதமொன்றை அல்லது காப்புறுதி முறியொன்றைக் கொடுத்துதவுவதற்கு மீளளிப்பின் அத்தகைய தொகை அமைந்ததாகவிருப்பின், பதினைந்து நாட்களினுள் அத்தகைய ஆளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 58அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது, அச்சட்டவாக்கத்தின் 58அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"உல்லாசப் பயணிகளுக்கு வரியை மீளளித்தல்.

58அ. (1) உல்லாசப் பயணியாகவிருந்து கொண்டு, குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் எழுத்திற் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கையொன்றின் மூலம் —

(அ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளராகவுள்ள எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆளிடமிருந்து இலங்கையில் எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களைத் தாம் கொள்வனவு செய்துள்ளாரென்றும்

(ஆ) அத்தகைய பண்டங்கள் விதித்துரைக்கப்பட்டவாறான ஆகக் குறைந்த பெறுமதிக்கு மேன்மிகையாகவுள்ளனவென்றும் ; அத்துடன்

(இ) அத்தகைய உல்லாசப் பயணி, அவருக்கு வழங்கப்பட்ட வரிப்பணப் பட்டியலின்படி அத்தகைய கொள்வனவுகள் மீதான வரியைச் செலுத்தியுள்ளாரென்றும்,

நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுச் செயலாளரின் அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளின் திருப்திக்கு எண்பித்துள்ள ஆளொருவர், அத்தகைய உல்லாசப்பயணி புறப்படுமிடத்தில் சோதனைக்காக இயைபான பண்டங்களை அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் காண்பித்தால், அத்துடன் அத்தகைய பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களினுள் அத்தகைய பண்டங்கள் இலங்கையிலிருந்து அகற்றப்படுவனவாகவிருப்பின், விடயத்துக்கேற்ப, செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், அத்தகைய நிகழ்வுகள் பற்றித் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய பண்டங்கள் இலங்கையிலிருந்து அகற்றப்படும் நேரத்தில், ரூபா பெறுமதியில் நூறு ஐ.நா. டொலருக்குச் சமமானதை விஞ்சுகின்றவாறாகச் செலுத்தப்பட்ட வரியின் அத்தகைய தொகையை, வெளிநாட்டு நாணயத்தில் அத்தகைய உல்லாசப்பயணிக்கு மீளளித்தல் வேண்டும் அல்லது மீளளிப்பதற்கு அவசியமான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்

(2) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவராகவுள்ள எவரேனும் சில்லறை விற்பனையாளர், இப்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்காக அமைச்சுச் செயலாளருக்கு அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சில்லறை விற்பனையாளர் அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளரின் பதிவு எந்நிபந்தனைக்கமைய வழங்கப்படுகின்றதோ அந்நிபந்தனை எதனையும் மீறுகின்ற அந்த அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரின் முன்னர் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அவரது பதிவு இல்லாதாக்கப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இருபதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வரிப்பணப் பட்டியலொன்று, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பண்டங்களைக் கொள்வனவு செய்துள்ள எவரேனும் உல்லாசப்பணிக்கு அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளரினால் அத்தகைய வழங்கல் செய்யப்படும் நேரத்தில், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் தொடர்பாக மட்டுமே அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தில் முரணான வேறெவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனை

யாளருக்கும் ஆணையாளர் தலைமையதிபதியினால் மாதாந்த வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகள் குறித்தொதுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர் அதற்கிணங்க மாதாந்த விவரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

"உல்லாசப் பயணி" என்பது, இலங்கைப் பிரசையொருவரல்லாதவரும் இலங்கையில் தொழிலுக்கமர்த்தப் படாதவரும், அல்லது அவர் இலங்கையை தேதிக்கு முன்னரான இரண்டாண்டுகளில் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களுக்கோ அதற்கதிகமாகவோ இலங்கையில் வதியாதவருமான எவரேனும் தனியாள் என்று பொருளாகும் ;

"குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள்" என்பது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய பண்டங்களாதல் வேண்டும்.".

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு, அதன் (2)ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) பின்வருவன நிதியத்துக்கு வரவுவைக்கப் படுதல் வேண்டும் :-

(i) 2002, ஓகத்து 1 ஆம் தேதியிலிருந்து தொடங்குகின்ற காலப்பகுதியிலிருந்து ஆரம்பிப்பதான ஒவ்வொரு மாதத்தையும் அதன்பின்னரான ஒவ்வொரு மாதத்தை

யும் உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன் முன்னர், அந்த ஒவ்வொரு மாதத்திலும் சேகரிக்கப்பட்ட வரியின் இருபத்தைந்து சதவீதம் ; அத்துடன்

(ii) 2006, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து தொடங்குகனிற காலப்பகுதிக்காக 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களின் இறக்குமதியின் மீது, அந்த மாதத்தையும் அதன் பின்னரான ஒவ்வொரு மாதத்தையும் உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதன்முன்னர், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியானற் சேகரிக்கப்பட்ட வரியின் பத்து சதவீதம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

“(1) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்படுகின்ற அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் அல்லது நிறைவேற்றுவதற்கு உதவுவதில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிவதில் தமது அறிவுக்கெட்டக்கூடிய எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் இரகசியத்தைப் பேணுதலும், இரகசியத்தைப் பேணுவதற்கு உதவுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் கருமத்தை அத்தகைய கருமம் தொடர்புபட்ட ஆள் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது அமைச்சர் அல்லது நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள

அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் தவிர்ந்த வேறெவரேனுமாளுக்கு அறிவித்தலுமாகாது, அல்லது ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப் பாட்டில் உள்ள எவையேனும் பதிவேடுகளைப் பார்வையிடுவதற்கு எவரேனுமாளை விடுதலோ அல்லது அனுமதித்தலோ ஆகாது.";

(2) இரண்டாம் உட்பிரிவில் "இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வோர் ஆளும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப் பட்ட அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டவராகக் கருதப்பட்ட ஒவ்வோர் ஆளும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) மூன்றாம் உட்பிரிவில் "இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள ஆளெவரும், இச்சட்டத்தின் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சந்தர்ப்பத்தில் தவிர, இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிகையில் அவரின் அவதானத்துக்கு வருகின்ற ஏதேனும் விபரத்திரட்டை ஆவணத்தை ஏதேனும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தின்கீழ் நிய மிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் அல்லது அவற்றை நிறைவேற்றுவதற்கு எவரேனுமாளுக்கு உதவுவதில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளெவரும், இச்சட்டத்தின் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சந்தர்ப்பத்தில் தவிர, இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிகையில் அவரின் அவதானத்துக்கு வருகின்ற ஏதேனும் விபரத்திரட்டை, ஆவணத்தை அல்லது வரிமதிப்பீட்டை ஏதேனும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(4) நான்காம் உட்பிரிவில் "இப்பிரிவிலுள்ள எதுவும்" என்னும் சொற்களிலிருந்து "நீதிமன்றம் எதிலும் சமர்ப்பிக்கலாம் அல்லது சமர்ப்பிக்கச் செய்யலாம்:" என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருப்பினும், உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர், இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் கடமைகளைப் புரிகையில் தமது அறிவுக்கெட்டக்கூடிய ஏதேனும் கருமத்தை, அத்தகைய கருமத்தை அறிவிப்பது இச்சட்டத்தின்கீழ் அல்லது அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏதேனும் கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகவிருப்பின், அறிவிக்கலாம் என்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழ் அல்லது அவரினால் நிருவகிக்கப்படும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அவருக்குக் கொடுத்துதவப்பட்டதும் அல்லது வேறுவகையில் அவரது உடைமையிலுள்ளதும், அத்தகைய விபரங்களின் சரியான பிரதியென அவரினால் அல்லது அவரின் சார்பில் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் விவரத்திரட்டில் அல்லது ஆவணத்தில் அடங்கியுள்ள எவையேனும் விபரங்களின் பிரதியொன்றை இச்சட்டத்தின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் ஏதேனும் நீதிமன்றத்தில் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம் ; அத்துடன், அத்தகைய பிரதி, ஆவணங்களை எண்பித்தல் தொடர்பாகச் சான்றுக் கட்டளைச் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) ஐந்தாம், (6) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை மாற்றீடு செய்வதன்மூலமும் :-

"(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி -

(அ) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழு

வொன்றினால் தேவைப்படுத்தப்படும்போது, அத்தகைய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஓர் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு, ஆணைக்குழுவினால் எந்த ஆளின் நடத்தை விசாரணை செய்யப்படுகின்றதோ அந்த ஆளின் அல்லது அத்தகைய ஆளினது வாழ்க்கைத் துணையின் அல்லது ஒரு மகனின் அல்லது ஒரு மகளின் அல்லது ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட வேறெவரேனும் ஆளின் அலுவல்கள் தொடர்பாக அவருக்குக் கிடைக்கக்கூடிய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுதல் வேண்டும் என்பதுடன், அறிவித்தலில் அவ்வாறு குறித்துரைக்கப்படுகின்றவாறு, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆள், வாழ்க்கைத்துணை, மகன் அல்லது மகள் அல்லது வேறு ஆள் தொடர்பாக ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில், அல்லது அவரது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் ஆவணத்தைக் காண்பித்தலும் அல்லது கொடுத்துதவுதலும் வேண்டும்.

(ஆ) எவரேனுமாளுக்கெதிராக இலஞ்சச் சார்த்துதலொன்றைப் புலனாய்வு செய்வதில் அல்லது இலஞ்சத்துக்காக எவரேனுமாளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடங்கப்பட்ட பின்னர் அல்லது அவர் நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்ட பின்னர், சட்டத்துறைத் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படும்போது, அவருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய ஆளினது வாழ்க்கைத்துணையின் அல்லது ஒரு மகனின் அல்லது மகளின் அலுவல்கள் தொடர்பாக அவருக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதல் வேண்டும் என்பதுடன், அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டவாறு, ஆணையாளர் தலைமை

யதிபதியின் உடைமையில் அல்லது அவரது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள, அத்தகைய ஆள், வாழ்க்கைத்துணை, மகன் அல்லது மகள் தொடர்பான ஏதேனும் ஆவணத்தை அல்லது ஏதேனும் ஆவணத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைக் காண்பித்தலும் அல்லது கொடுத்துதவுதலும் வேண்டும் ;

(இ) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்றினால் தேவைப்படுத்தப்படுமிடத்து, அவருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலொன்றில் குறித்துரைக் கப்பட்டவாறு, எந்த ஆளின் நடத்தை ஆணைக் குழுவினால் விசாரணை செய்யப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளின் அல்லது அத்தகைய ஆளினது வாழ்க்கைத்துணையின் அல்லது ஒரு மகனின் அல்லது மகளின் அலுவல்கள் தொடர்பாக அவருக்குக் கிடைக்கக்கூடியதாக வுள்ள எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிவித்த லிற் குறித்துரைக்கப்பட்டவாறு, ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையிலுள்ள அல்லது அவரது கட்டுப்பாட்டின் கீழுள்ள, அத்தகைய ஆள், வாழ்க்கைத்துணை, மகன் அல்லது மகள் தொடர்பான ஏதேனும் ஆவணத்தை அல்லது ஏதேனும் ஆவணத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைக் காண்பித்தலும் அல்லது கொடுத்துதவுதலும் வேண்டும் ;

(ஈ) கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவலிலிருந்து எவரேனுமாள் இலஞ்சத்துக்குக் குற்றவாளியாக வுள்ளாரென அவர் சந்தேகிக்குமிடத்தான ஏதேனும் விடயத்தைப் புலனாய்வுக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அறிக்கையிடு தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், உண்ணாட்டரசிறைத் திணைக் களத்தின் எவரேனும் அலுவலர், 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் வேண்டுகோளின்பேரில், அச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆணைக்குழு அதன் தத்துவங் களைப் பிரயோகிப்பதற்கும் அதன் பணிகளை நிறை வேற்றுவதற்கும் அதனால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறாக, இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப்புரிகையில் தமது அறிவுக்கெட்டக்கூடிய, எவரேனுமாளின் அலுவல்கள் தொடர்பான அத்தகைய விபரங்களை அத்தகைய ஆணைக் குழுவுக்கு வெளிவிடுதல் வேண்டும்.

(7) இப்பிரிவில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி கணக்காய்வாளர் தலைமை யதிபதிக்கு அல்லது அதற்கென அவரினால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர்களுக்கு, தமது அலுவலகமுறையான கடமைகளைப்புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறாக எவையேனும் புத்தகங்கள், பதிவேடுகள், விவரத்திரட்டுகள் அல்லது ஏனைய ஆவணங்கள் என்பவற்றைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கலாம்.

கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது இவ்வுட்பிரிவின்கீழ் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், (2)ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளொரு வராகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எவ்வா றிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் எவரேனுமாள், காலத்துக்குக்காலம், ஆணையாளர் தலைமையதிபதி உசிதமானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய முறையில் பின்வருவனவற்றை வெளியிடச் செய்தல் வேண்டும் :-

(அ) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் எல்லா வரிப்பணம் செலுத்துவோரினதும் பெயர்களையும், முகவரிகளையும், அத்தகைய வரிப்பணம் செலுத்துவோரின் விவரத்திரட்டுகளில் வெளிப்படுத்தப்பட்ட மொத்த வருமானத்தையும், ஆணையாளர் தலைமையதிபதி அவசியமெனக் கருதுகின்றவிடத்து, அவர்களின் பிரதான வருமான மூலங்களையும் கொண்டுள்ள நிரலொன்றும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்காக ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள அல்லது 104 ஆம் பிரிவின்கீழ் அல்லது 143 ஆம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அவர்மீது தண்டமொன்று விதிக்கப்பட்டுள்ள எவரேனுமாள் தொடர்பிலான விபரங்களும்.

(9) ஒரு காப்புறுதித்தொழில் தொடர்பில் வழங்கப்பட்ட காப்புறுதிப்பத்திரங்களை வைத்திருப்போரின் நலன்களுக்குப் பங்கம்விளைவிக்கின்றவொரு முறையில் செயலாற்றியுள்ள அத்தொழிலின் எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது வேறு அலுவலர் அல்லது ஊழியர் என்போருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கும் நோக்கங்களுக்காக, சட்டத்துறைத் தலைமையதிபதி ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையிலுள்ளவாறான அத்தகைய பணிப்பாளர், முகாமையாளர், வேறு அலுவலர் அல்லது ஊழியர் என்போர் தொடர்பான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு ஆணையாளர் தலைமையதிபதியை எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்துமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும் எவ்வாறிருப்பினும், அத்தகைய தகவலைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(10) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் அடங்கியுள்ளதெதுவும் எவ்வாறிருப்பினும், எவரேனுமாள் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் அல்லது சுங்கக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளாரென, ஆணையாளர்

தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிகையில் அவரது அறிவுக்கெட்டுகின்ற ஏதேனும் கருமத்திலிருந்து அவருக்குத் தோன்றுமிடத்து, விடயத்துக்கேற்ப, செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, அவர், தவறுபுரியப்பட்டமை தொடர்பான ஏதேனும் தகவலை அல்லது அத்தகைய தவறுபுரியப் பட்டதென்பதை எண்பிக்கும் நோக்கத்துக்கு அவசியமான அல்லது பயனுள்ள எவையேனும் பொருட்களை, கணக்குப் புத்தகங்கள் அல்லது ஆவணங்களை அறிவிக்கலாம் அல்லது அவரிடம் ஒப்படைக்கலாம்.

(11) விடயத்துக்கேற்ப, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் அல்லது சுங்கக்கட்டளைச் சட்டத்தின்கீழ் எவரேனுமாளினால் தவறொன்று புரியப்பட்டமை தொடர்பான ஏதேனும் தகவலை அல்லது புரியப்பட்டமையை எண்பிக்கும் நோக்கத்துக்கு அவசியமான அல்லது பயனுள்ள எவையேனும் பொருட்களை, கணக்குப் புத்தகங்களை அல்லது வேறு ஆவணங்களை ஆணையாளர் தலைமையதிபதி (10) ஆம் உட்பிரிவின்கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்துள்ளவிடத்து அல்லது அவரிடம் ஒப்படைத்துள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் வேறெவரேனும் அலுவலர், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தவறுக்காக அத்தகைய ஆளுக்கெதிரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், அத்தகைய தகவல், பொருட்கள், கணக்குப் புத்தகங்கள் அல்லது வேறு ஆவணங்கள் தொடர்பாகச் சான்றளிக்கலாம் என்பதுடன், அத்தகைய வழக்கு நடவடிக்கை களில் காண்பிக்குமாறு அவர் தேவைப்படுத்தப்படக்கூடிய எவையேனும் விவரத்திரட்டுக்களை, கணக்குப் புத்தகங்களை, வேறு ஆவணங்களை அல்லது பொருட்களை அவர் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம். ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய வேறு அலுவலர், ஏதேனும் விவரத்திரட்டில், கணக்குப்புத்தகங்களில் அல்லது வேறு ஆவணத்தில் அடங்கியுள்ள எவையேனும் விபரங்களின் பிரதி யொன்றை அத்தகைய வழக்கு நடவடிக்கைகளின் நோக்கத்துக்காக

நீதிமன்றத்திற் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்ய லாம் ; அத்துடன் அத்தகைய பிரதி ஆவணங்களை எண்பித்தல் தொடர் பாகச் சான்றுக்கட்டளைச் சட்டத்திலுள்ளது எது எவ்வாறி ருப்பினும், சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டும்

ஆயின், ஆணையாளர் தலைமையதிபதி அல்லது வேறு அலுவலர் -

(அ) அத்தகைய விவரத்திரட்டை, கணக்குப் புத்தகங்களை அல்லது வேறு ஆவணத்தை எழுதிய, தயாரித்த, கையொப்பமிட்ட அல்லது கொடுத்துதவிய ஆளின் கையெழுத்தை அல்லது கையொப்பத்தை எண்பிப்பது அவசியமாகவுள்ளவிடத்தான ஏதேனும் விடயத்தில், ஆனால் அத்தகைய எண்பிப்பின் நோக்கத்துக்காக மட்டும் அத்தகைய விவரத்திரட்டின், கணக்குப் புத்தகங்களின் அல்லது வேறு ஆவணத்தின் மூலப் பிரதியைக் காண்பிக்கலாம் அல்லது காண்பிக்கச் செய்யலாம் ;

(ஆ) ஒன்றில் அத்தகைய விவரத்திரட்டின், கணக்குப் புத்தகங்களின் அல்லது வேறு ஆவணத்தின் மூலப்பிரதியை அல்லது அத்தகைய விவரத்திரட்டில், கணக்குப் புத்தகங்களில் அல்லது வேறு ஆவணத்தில் அடங்கியுள்ள விபரங்களின் பிரதியொன்றை நீதிமன்றத்தில் காண்பிக்குமாறு எவ்விடத்திலும் வலுக்கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

(12) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும், ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள, எவரேனுமாளின் அலுவல்கள் தொடர்பான எவையேனும் பதிவேடுகளை அல்லது ஆவணங் களைப் பார்வையிடுவதற்கு அல்லது பரிசோதனை செய்வதற்கு அமைச்சருக்கோ அல்லது அமைச்சரின் அமைச்சுச் செயலாள ருக்கோ தத்துவமளிப்பதாக வாசிக்கப்படுதல் அல்லது பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "கல்வித் தாபனம்" என்பதற்கான வரைவிலக்கணத்தின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :–

"(ஈ) தகவல் தொழினுட்பவியல், வாழ்க்கைத் தொழிற் பயிற்சி, முகாமைப் பயிற்சி, தேர்ச்சிகள் அபிவிருத்தி அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பயிற்சி, புடவைத் தொழிலும் ஆடைத் தொழிலும், தாதித் தொழில், உணவு பதனிடுகை, கமத்தொழில், பெருந்தோட்டத் தொழில் அல்லது கைத்தொழில் என்ற துறைகளில் வாழ்க்கைத் தொழிற்பயிற்சியை அல்லது செயல்முறைப் பயிற்சியை வழங்கி, பதினைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாத ஆகக்குறைந்தவொரு முதலீட்டுடன், 1978 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள நிறுவனமொன்று என்று பொருளாகும் ;"

(2) "நியம வீதம்" என்பதன் வரைவிலக்கணத்தில் "இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாம் அட்டவணையிலும், மூன்றாம் அட்டவணையிலும், நான்காம் அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) "வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி" என்பதன் வரைவிலக்கணத்தில், பந்தி (அ)வின் (V) ஆம் விடயத்தை உடனடுத்துப்பின்னர் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(vi) விடயத்துக்கேற்ப, புடவைப் பங்கீட்டுச் சபையுடன் அல்லது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன்

பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள், 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையுடன் அல்லது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளரொருவருக்கு வழங்கல்களைச் செய்கின்றவிடத்து,".

முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, II ஆம் பாகத்தில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) (அ) என்னும் பந்தியில்,—

(அ) (1) ஆம் விடயத்தில், முட்டையும், திரவப் பாலும் (பால்மாவிலிருந்து அல்லது ஏதேனும் தானியத்திலிருந்து செய்யப்படாதது);" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முட்டையும், திரப்பாலும் (பால்மாவிலிருந்து அல்லது தானியத்திலிருந்து செய்யப்படாதது) மற்றும் பால்மா;"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) (iv)ஆம் விடயத்தில், "வானூர்திகள், உலங்கு வானூர்திகள் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வானூர்திகள், உலங்கு வானூர்திகள், முத்துக்கள், வைரங்கள், இயற்கையான அல்லது செயற்கையான அருங்கற்கள் அல்லது மருவிய அருங்கற்கள், வைரத்தூள், அரும் உலோகங்கள், அரும் உலோகங்கள் தோய்ந்த உலோகங்கள் அத்துடன் தங்க நாணயங்கள் ;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) (vi) ஆம் விடயத்தில், "மண்ணெண்ணெய், வானூர்தி எரிபொருள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மண்ணெண்ணெய், திரவப் பெற்றோலிய வாயு மற்றும் வானூர்தி எரி

பொருள் (2005, ஓகத்து 5 ஆம் தேதியலிருந்து பயனுள்ளது) ; மற்றும் டீசல் (2005.8.1 ஆம் தேதியிலிருந்து பயனுள்ளது) என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஈ) (XI) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன்மூலமும் :-

"(XII) சுங்க நோக்கங்களுக்காக சுமுகப்படுத்தப்பட்ட உணவுப்பொருள் விவரணமும் கோவையிடும் முறைமை இலக்கங்களும் என்பதன்கீழ் 2005.12.23 ஆம் திகதியிலிருந்து பயனுறுமாறு உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் அடையாளங் காணப்படுகின்ற, 2008, திசெம்பர் 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல் இறக்குமதி செய்யப்படும் நிர்மாணத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் எந்திரத் தொகுதி, பால் பதனிடுதல் எந்திரத் தொகுதி, கணனித் துணைப் பொருட்களுட்பட கணனிகள், கைத்தறித் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் எந்திரத் தொகுதியும், நூ ழிலையும், சாயங்களும் மற்றும் அரிசி ஆலைப்படுத்தல் தொழிலுக் காகப் பயன்படுத்தப்படும் எந்திரத் தொகுதி ;

(XIII) விலக்களிப்பு நோக்கங்களுக்காக முப்பது மில்லியன் ரூபாவுக்குக் குறையாத மூலதன முதலீடொன்றையும் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 20ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏனைய கட்டளைக் கற்களையும் கொண்டுள்ளவாறு, கொழும்பு, கம்பஹா அல்லாத வேறேதேனும் மாவட்டத்தில் ஏதேனும் கம்பெனியால்

புதியதொரு பொறுப்புமுயற்சியிற் பயன்படுத்தப்படுவதற்காக அத்தகைய கம்பெனியினாலான பொறித் தொகுதியும் எந்திரத்தொகுதியும் ;

(XIV) ஊடக ஆளணியினரினால் பயன்படுத்தப்படுவதற்காக, ஊடகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் விதந்துரைக்கப்பட்ட ஊடகச் சாதனங்கள் அல்லது மோட்டார் சைசிக்கிள்கள். " ;

(2) (ஆ) என்னும் பந்தியில்,

(அ) (1) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(1) (அ) கல்வித் தாபனமொன்றினால் அல்லது அரசாங்கப் பாடசாலையால் அல்லது அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட பாடசாலையொன்றினால் அல்லது (2004, யூலை 1 ஆம் தேதியிலிருந்து பயனுள்ள) அரசாங்கப் பாடத்திட்டத்தைப் பின்பற்றிய , கல்வி அமைச்சுடன் பதிவுசெய்யப்பட்ட பாடசாலைகளினாலான கல்விச் சேவைகள் ; அத்துடன்

(ஆ) அரசாங்கத்தினாலான, மாகாண சபையினாலான அல்லது உள்ளூரதிகார சபையினாலான பொது நூலகச் சேவை ;".

(ஆ) (IX) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(IX) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு இயற்கையான அல்லது மனித அழிவுகளினால் விளைவிக்கப்பட்ட திடீர் இடருக்கு நிவாரணமளிப்பதற்காக, தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கருத்திற் கொண்டு ஏதேனும் செயற்பாட்டுக்கு வெளிநாட்டு ஒழுங்கமைப்புகளினால் நேரடியாக நிதியளிக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் ;";

(இ) (xii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xiii) மூன்றாம் அட்டவணையிற் குறிப்பீடு செய்யப்பட்ட பதனிடப்படாத வெட்டு மரக்குற்றிகளும், கப்பல்களும் அல்லது பண்டங்களும் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படுமளவுக்கு அத்தகைய வெட்டுமரக்குற்றிகளும், கப்பல்களும் அல்லது பண்டங்களும் ;

(xiv) உயர் புரதச்சத்துடைய மற்றும் உயர் ஊக்கமூட்டும் கமஞ்சார் உணவுகளாக ஆணையாளர் தலைமையதிபதியினால் அடையாளங்காணப்பட்டவாறு, இலங்கையில் பயிரிடப்பட்ட தயாரிப்பி

லிருந்து தயாரிக்கப்பட்ட உணவு உற்பத்திப் பொருட்கள் அத்துடன் புற வளர்ச்சியாளர்களிட மிருந்து பின்னோக்கி ஒன்றிணைவுடன் அத்த கைய தானியங்களினால் பெற்றுக் கொள்ளுதல்கள் பொறுப்பேற்கப்படு தல் வேண்டும் ;

(xv) 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, டவர் மண்டபத் தியேட்டர் நிதித் தாபனச் சட்டத்தி னால் தாபிக்கப்பட்ட டவர் மண்டபத் தியேட்டர் நிதித்தாபனத்தினாலான அல்லது 1980 ஆம் ஆண் டின் 57 ஆம் இலக்க, மத்திய கலாசார நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப் பட்ட மத்திய கலாச்சார நிதியத் தினாலான சேவைகள் ;

(xvi) கடல் மண் ;";

(3) (இ) என்னும் பந்தியில்,

(அ) அதன் (III) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(III) பண்டங்களானவை, இயற்கையான அல்லது மனித அழிவுகளினால் விளைவிக்கப்பட்ட திடீர் இடருக்கு நிவாரணமளிப்பதற்காக, வெளிநாட் டிலுள்ள ஆட்களிடமிருந்து அல்லது

ஒழுங்கமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கொடைகளாகவுள்ளன அல்லது அத்தகைய ஒழுங்கமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்தா னவை அல்லது அத்தகைய பண்டங்கள் மருத்துவச் சாதனங்களாக மருத்துவ எந்திரத்தொகுதியாக அல்லது ஏதேனும் பிணியாளர் வண்டியாக உள்ளவையென அமைச்சர் திருப்திப்படுமிடத்து அவரி னால் அங்கீகரிக்கப்படும் ஒழுங்கமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட அத்தகைய பண்டங்கள் ";

(ஆ) (x) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன்மூலமும் :-

"(xi) ஏதேனும் கப்பல் ;

(xii) பதனிடப்படாத வெட்டுமரக் குற்றிகள்.".

**19.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான நான்காம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்துக்கான நான்காம் அட்டவணையைத் திருத்துதல்.*

(1) பந்தி (அ)வில், (xix) மற்றும் (xx) என்னும் விடயங்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(xix) காற்றடைத்த தண்ணீர், இலங்கையில் பயிரிடப்பட்ட பின்வருவனவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட பானங்கள் :—

(i) இஞ்சி ;

(ii) நெல்லி ; அல்லது

(iii) ஆயுள்வேதத் தாவரங்கள் ; அத்துடன்

(xx) சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட உணவுப்பொருள் விவரணத்தின் இலக்கங்கள் 22.07 அல்லது 22.08

என்பவற்றிற் குறிப்பீடு செய்யப்பட்ட எதைல் அற்ககோல் மற்றும் ஏனைய மதுசாரங்கள் உட்பட மதுபானம் ;"; அத்துடன்

(2) அதன் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(ஆ) ஹோட்டல்களாலும் விருந்தினர் விடுதிகளாலும் சிற்றுண்டிச்சாலைகளாலும் அல்லது இவற்றையொத்த நிறுவனங்களாலும் வழங்கப்படும் சேவைகள், திருமண வரவேற்புபசாரங்களையும் ஏனைய வரவேற்புபசாரங்களையும் நடாத்துவதற்காக வழங்கப்படும் அளவுவரை அத்தகைய சேவைகளின் வழங்குகை ; இது, உயர்தொழில்சார் மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் அல்லது இவற்றையொத்த நிகழ்வுகளையும் நடாத்துவதற்காக வழங்கப்படும் சேவைகள் தவிர, திருமண வரவேற்புபசாரங்களையும் அல்லது வேறு வரவேற்புபசாரங்களையும் நடாத்துவதற்காக பண்டங்களை வாடகைக்கு விடுதலை உள்ளடக்கும்.".

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**20.** (அ) இச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2006, சனவரி 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2006 சனவரி 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2006, சனவரி 1 ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) (I) இச்சட்டத்தின் 7(1) (ஆ) என்னும் பிரிவின் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22(3) ஆம் பிரிவுக்கான நான்காவது காப்பு வாசகத்துக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2005, ஓகத்து 2 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(II) இச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்திக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2006, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(உ) இச்சட்டத்தின் 14 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்துக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2006, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்குவந்து விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஊ) இச்சட்டத்தின் 15 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 71(உ) ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2006, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(எ) இச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2006, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஏ) இச்சட்டத்தின் 18(1) (இ) என்னும் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்ட

*வணையின் II ஆம் பாகத்தின் (அ) என்னும் பந்தியின் (IV) ஆம் விடயத்துக்குச் செய்யப்பட்ட திருத்தம், தீசல் பற்றிக் குறிப்பீடுசெய்யப்பட்ட விலக்களிப்புத் தவிர, எல்லா நோக்கங்களுக்காக வும், 2005, ஓகத்து 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

(ஐ) *இச்சட்டத்தின் 18 (1) (ஆ) என்னும் பிரிவினாலும் (இ) என்னும் பந்தியில் தீசலினாலும் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையில் II ஆம் பாகத்தின் (அ) என்னும் பந்தியின் (IV) ஆம் விடயத் துக்கும் (VI) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தீசலுக்கும் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங் கங்களுக்காகவும், 2005, ஓகத்து 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண் டும்.*

(ஒ) *இச்சட்டத்தின் 18(1) (ஈ) என்னும் பிரிவினால் (அரிசி ஆலைப்படுத்தற் கைத்தொழிலுக்கான எந்திரத்தொகுதி நீங்கலாக) முதன்மைச் சட்ட வாக்கத்தின் முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (அ) என்னும் பந்தியின் (XII) ஆம் விடயத்துக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்கங்களுக்காகவும், 2005 நவெம்பர் 16 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்.*

(ஓ) *இச்சட்டத்தின் 18(2) (இ) என்னும் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்ட வணையின் II ஆம் பாகத்தின் (ஆ) என்னும் பந்தி யின் (XIII) ஆம் விடயத்துக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2005, நவெம்பர் 16 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்ட தாகக் கருதப்படுதல் வேண்டும்.*

(ஔ) *இச்சட்டத்தின் 18(2)(இ) என்னும் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்ட வணையின் II ஆம் பாகத்தின் (ஆ) என்னும் பந்தி யின் (XIV) ஆம், (XV) ஆம் விடயங்களுக்குச் செய்யப்*

பட்ட திருத்தம், எல்லா நோக்கங்கங்களுக்காகவும், 2006, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்து விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(க) இச்சட்டத்தின் 18 (3) (இ) என்னும் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (இ) என்னும் பந்தியின் (XI) ஆம், (XII) ஆம் விடயங்களுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 2006, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ங) இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான நான்காம் அட்டவணையின் (அ) என்னும் பந்தியின் (xix) என்னும் விடயத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 2006, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

நட்டோத்தரவாதம்.

**21.** இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு 2005, ஓகத்து 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது சேர்பெறுமதி வரியைச் சேகரிக்கின்ற எவரேனுமாள், உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பு எல்லா, நோக்கங்களுக்காகவும், செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும், செய்யப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஆள், அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்கப்படுகின்றார்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**22.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்